Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 163 | உள்ளூர் - 12.06.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 163 | வெளியூர் - 13.06.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

மத்திய அரசு நிறுவனத்தில் 67 பணியிடங்கள்!

நவகிரகங்களை கட்டுப்படுத்தும் ரகசியம்..!

விஜய்யா? அண்ணாமலையா? ராகவா லாரன்ஸின் முடிவு!

ஜூலை முதல் IRCTC இணையதளத்துக்கு குட்பை..!!

## விவசாயிகளுக்கு குட்நியூஸ்.. முதல்வர் விஜய்..!

சென்னை, ஜூன். 12–

மேட்டூர் அணை திறக்கப்படாத நிலையில் டெல்டா மற்றும் பிற மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.134 கோடி குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை முதல்வர் விஜய் அறிவித்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழகத்தில் சராசரியாக 52.72 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களின் அனைத்துப் பகுதிகளிலும், கடலூர், திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும் நெற்பயிரே முதன்மையாக சாகுபடி செய்யப்படுகிறது.

டெல்டா மாவட்டங்களில் ஆண்டுக்கு 20.65 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், குறுவைப் பருவத்தில் மட்டும் சராசரியாக 5.14 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.



மேலும், டெல்டா அல்லாத இதர மாவட்டங்களில், ஆண்டுக்கு 32.07 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேட்டூர் அணை திறக்கப்படாத நிலையில் காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் குறுவை, கார் மற்றும் சொர்ணவாரிப் பருவங்களில் மேற்கொள்ளப்படும் நெல் சாகுபடியை ஊக்குவித்து, நெல் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் 2026ம் ஆண்டில், 134.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

வேளாண் பொறியியல் துறை வாயிலாக டெல்டா மாவட்டங்களில் உள்ள 2,325 கி.மீ. நீளமுள்ள C மற்றும் D வாய்க்கால்கள் 10 கோடி ரூபாய் செலவில் தூர் வாரப்பட்டுள்ளன. மேலும், நீர்வளத்துறை மூலமாக 100 கோடி ரூபாய் செலவில் 4,971 கி.மீ. நீளமுள்ள A மற்றும் B வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டு தற்போது வரை 97 சதவீதப் பணிகள் முடிவுற்றுள்ளன.

குறுவை சாகுபடிக்கு 10,714 மெட்ரிக் டன் நெல் விதைகள் மற்றும் 4.02 இலட்சம் மெட்ரிக் டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தடையில்லா மும்முனை மின்சாரம் நாளொன்றுக்கு 18 மணிநேரம் வழங்கப்படும். டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகளைப் பெற்றுப் பயன் அடைய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## தி.மு.க. தோல்வி: ஸ்டாலினுக்கு சென்ற ரிப்போர்ட்..!

சென்னை, ஜூன். 12–

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் இரு பெரும் திராவிட கட்சிகளை வீழ்த்தி விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் அதிக இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது... இதையடுத்து தேர்தல் முடிவுகள் குறித்து திமுக தலைவர் மு.க ஸ்டாலின் பல கட்ட ஆலோசனைகளை மேற்கொண்டார்.. மேலும் தேர்தல் தோல்வி குறித்து ஆய்வு 32 பேர் கொண்ட குழுவையும் அமைத்தார்.. இந்த குழு தமிழக முழுவதும் கள ஆய்வு செய்து தங்கள் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தார்..

அதன்படி இந்த குழுவினர் தமிழகம் முழுவதும் கள ஆய்வு மேற்கொண்ட நிலையில் இந்த குழுவில் ஒரு பிரிவினர் நேற்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலினிடம் சமர்ப்பித்தனர்..

இந்த நிலையில் இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள விபரங்கள் குறித்த




தகவல்கள் வெளியாகின.. அதில் கூட்டுறவு சங்கம், ஆவின் உள்ளிட்ட தேர்தல்களை நடத்ததாதால் கட்சி நிர்வாகிகள் அதிருப்தியில் இருந்தனர் என்று கூறப்பட்டுள்ளது... மக்கள் குறைகளை அமைச்சர்களிடம் கொண்டு செல்ல உதவியாளர்களே முட்டுக்கட்டை என புகார் உள்ளது.. பல முறை காத்திருந்தும் அமைச்சர்களை பார்க்க முடியாமல் திரும்பி சென்றதாகவும் கட்சி நிர்வாகிகள் வேதனை தெரிவித்துள்ளனர்..

களத்தில் திமுக அரசு திமுக கட்சி என இரண்டாக பிரிந்து நின்றதாகவும் அறிக்கையில் தகவல் தெரிவிக்கப்பட்டு ள்ளது.. உள்ளாட்சி பிரதிநிதிகள் கேட்கும் திட்டங்களுக்கு அதிகாரிக ளின் ஒத்துழைப்பு இல்லை எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.. அதிகாரிகள் அவர்களாகவே திட்டங்களை முடிவு செய்ததாகவும் கள ஆய்வில் புகார் தெரிவித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.. கட்சியில் உள்ள இளைஞர்களின் சக்தியை முழுமையாக பயன்படுத்தவில்லை என அறிக்கையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது..

தற்காலிக நியமன பொறுப்புகளில் கட்சியினருக்குமுன்னுரிமை வழங்கப்படவில்லை. கட்சி பொறுப்புகளில் இல்லாத மூத்த நிர்வாகிகளை கண்டுகொள்ளவில்லை என்றும் புகார் தெரிவித்துள்ளனர்.. ஒப்பந்தங்கள் பெரும்பான்மையாக திமுகவினருக்கு ஒதுக்கப்படவில்லை என்றும் கள ஆய்வில் பலர் புகார் தெரிவித்தனர்..

## தாக்குதல் திட்டம் ரத்து..!

# ஈரான் போரில் பரபரப்பு..! கடைசி நேரத்தில் திருப்பம்..!

### டிரம்ப் எடுத்த அதிரடி முடிவு..!!

வாஷிங்டன், ஜூன். 12–

அமெரிக்கா – ஈரான் பேச்சுவார்த்தையில் இழுபறி நீடித்து வரும் நிலையில் ஹார்முஸ் ஜலசந்தியில் ரோந்து சென்ற அமெரிக்காவின் அபாச்சி ரக ஹெலிகாப்டரை ஈரான் சுட்டு வீழ்த்தியது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஈரானின் தீவு பகுதிகளில் உள்ள வான் பாதுகாப்பு ரேடார்கள் மீது அமெரிக்கப்படை குண்டு மழை பொழிந்தது. தொடர்ந்து, ஈரான் தலைநகர் டெஹ்ரான், பந்தர் அப்பாஸ் துறைமுக நகரம், மற்றும் ஹார்முஸ் ஜலசந்தியை ஒட்டியுள்ள ராணுவ தளங்கள் மீது அமெரிக்கா 2–வது நாளாக நேற்று காலை மீண்டும் தாக்குதல் நடத்தியது.

**ஈரானை தாக்க முடிவு**

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக பஹ்ரைன், குவைத் மற்றும் ஜோர்டானை நோக்கி ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதனால் குவைத் வான்வெளி நேற்று பல மணி நேரம் மூடப்பட்டது. இந்நிலையில், ஈரான் மீது வியாழக்கிழமை இரவு அமெரிக்கா தாக்குதல் நடத்த இருந்த நிலையில் தற்போது அந்த தாக்குதல் ரத்து செய்யப்பட்டுள்ளதாக




டிரம்ப் அறிவித்துள்ளார்.

ஈரானின் உயர்மட்டத் தலைவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் மிகப்பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். இது குறித்துத் தனது ட்ரூத் சோசியல் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள டிரம்ப், “ஈரான் இஸ்லாமியக் குடியரசுடனான பேச்சுவார்த்தைகள் அந்த நாட்டின் மிக உயர்மட்டத் தலைமை வரை கொண்டு செல்லப்பட்டு, அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், அமெரிக்க அதிபர் என்ற முறையில், இன்று ஈரான் மீது நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த வான்வழித் தாக்குதல்களையும் குண்டுவீச்சுகளையும் நான் ரத்து செய்துள்ளேன்.

**விரைவில் வெளியாகும் அறிவிப்பு**

இந்த விவாதங்களும் இறுதிப் புள்ளிகளும், அடிப்படைக் கருத்துருவிலும் சரி, மிக விரிவான விவரங்களிலும் சரி, இதில் தொடர்புடைய அமெரிக்கா, இஸ்ரேல், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் , கத்தார், துருக்கி, பாகிஸ்தான், பஹ்ரைன், குவைத், ஜோர்டான், எகிப்து மற்றும் பிற நாடுகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கை முழுமையாக இறுதி செய்யப்படும் வரை, கடற்படை முற்றுகை எவ்வித மாற்றமும் இன்றி முழு வீச்சில் தொடரும். இதற்கான கையெழுத்து நடைபெறும் நேரம் மற்றும் இடம் குறித்த அறிவிப்பு மிக விரைவில் வெளியாகும்” என்று தெரிவித்துள்ளார்.

## ஜூன் 12-ல் மேட்டூர் அணை திறப்பு இல்லை?

மேட்டூர், ஜூன். 12–

டெல்டா பாசனத்துக்காக வழக்கமாக ஜூன் 12–ம் தேதி திறக்கப்படும் மேட்டூர் அணை, போதிய நீர் இல்லாத காரணத்தால் 62–வது முறையாக இந்த ஆண்டு குறித்த தேதியில் திறக்கப்படவில்லை. அணை திறப்பு தாமதமாவது குறித்தோ, குறுவை சிறப்பு தொகுப்பு திட்டம் குறித்தோ அரசிடமிருந்து எந்த அறிவிப்பும் வராததால் டெல்டா விவசாயிகள் கவலைஅடைந்துள்ளனர்.

டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் குறுவை, சம்பா, தாளடி பருவங்களில் நெல் சாகுபடி மேற்கொள்வதற்கு 120 அடி கொள்ளளவு கொண்ட மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12–ம் தேதி நீர் திறக்கப்படுவது வழக்கம். அதே நேரம், அணையில் நீர் இருப்பைப் பொறுத்து ஜூன் 12–ம் தேதிக்கு முன்பாகவோ அல்லது காலதாமதமாகவோ அணையில் இருந்து நீர் திறந்து விடப்படும்.

அணையில் குறைந்தபட்சம் 90 அடி நீர் இருந்தால் மட்டுமே டெல்டா சாகுபடிக்கு முழுமையாக திறக்க முடியும். ஆனால் நடப்பு பாசன ஆண்டுக்கு இன்று (ஜூன் 12) நீர் திறக்கப்பட வேண்டிய நிலையில் அணையின் நீர்மட்டம் 79.62 அடியாக உள்ளது. எனவே, இன்று நீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.



அணையின் 93 ஆண்டு கால வரலாற்றில் உரிய காலத்தில்(ஜூன் 12) டெல்டா பாசனத்துக்கு நீர் திறக்கப்படாமல்போவது இது 62–வது முறையாகும். உரிய நாளான ஜூன் 12–ம் தேதி 20 முறையும், நீர் இருப்பு திருப்திகரமாக இருந்ததால் ஜூன் 12–ம் தேதிக்கு முன்பு 11 முறையும் டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இந்தாண்டு குறிப்பிட்ட நாளில் அணை திறக்காததால், டெல்டா மாவட்டங்களில் சுமார் 6 லட்சம் ஏக்கரில் செய்ய வேண்டிய குறுவை சாகுபடியின் பரப்பளவு 50 சதவீதம் குறைந்துள்ளது. இதனால், பம்புசெட்பாசன வசதி கொண்ட விவசாயிகள் மட்டுமே குறுவை சாகுபடி பணிகளை மேற்கொண்டுள்ளனர். அதன்படி, டெல்டா மாவட்டங்களில் தற்போது சுமார் 3 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 1.75 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

ஆனால், தற்போது மின் தட்டுப்பாடு ஏற்பட்டு, நெற்பயிர்கள் காய்ந்து வருவதால் ஆங்காங்கே விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, விவசாயிகளுக்கு 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்குவதுடன், குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை அறிவிக்க வேண்டும் என தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

காவிரி விவசாயிகள்: இதுகுறித்து காவிரி உரிமை செயற்பாட்டாளர் வெ.ஜீவக்குமார் கூறியது: மேட்டூர் அணையின் நீர் இருப்பு என்பது இந்தாண்டு தொடக்கத்திலிருந்தே குறைவாகத் தான் உள்ளது. ஆனால், நமக்கு உரிய தண்ணீரை கர்நாடக அரசிடமிருந்து பெற தமிழக அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

மேலும், மேட்டூர் அணை ஜூன் 12–ம் தேதி திறந்தாலும் அல்லது காலதாமதம் ஆனாலும், வேளாண் துறை சார்பில் அறிவிப்பு வெளியிடப்படும். அதற்கு ஏற்ப, குறுவை சாகுபடிக்கு எந்தெந்த ரக விதைகளை தேர்வு செய்து பயிரிட வேண்டும் என ஆலோசனைகளும் வழங்கப்படும். ஆனால் இந்த ஆண்டு குறுவை சாகுபடி தொடர்பாக வேளாண் துறை எந்த அறிவுரையும் வழங்கவில்லை. அரசின் இந்த மவுனம் என்பது டெல்டா விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், இதுபோன்ற தருணங்களில் தமிழக அரசு குறுவை தொகுப்பு திட்டம் அறிவிக்கும். ஆனால், இதுவரை அதற்கான எந்த முயற்சியும் அரசு எடுக்காதது கவலை அளிக்கிறது என்றார். இதுகுறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்ததாவது: காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் போதிய அளவு மழை பெய்தால் தான் அணைக்கு நீர் வரும். தற்போது நீர் வரத்து 1,000 கன அடிக்கு குறைவாக உள்ளதால், இதே நிலை நீடித்தால் ஆகஸ்ட் மாதத்தில் தான் அணை நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றனர்.




தலையங்கம் மதுரை மணி

வெள்ளிக்கிழமை 12.06.2026

விசுவாவசு தமிழ் வருடம்

வைகாசி மாதம் 29-ம் தேதி

# ஆன்லைன் ஷாப்பிங் செய்பவரா?




இன்றைய சூழலில் பலர் ஆன்லைன் ஷாப்பிங்கையே அதிகம் விரும்புகின்றனர். வீட்டில் இருந்து கொண்டே தங்கள் மொபைலில் உணவு, ஆடைகள், ஏன் தங்கத்தை கூட ஆன்லைன் ஷாப்பிங் தளங்கள் மூலமாக வாங்குகின்றனர். இப்படி அதிக அளவிலான பணப்பரிவர்த்தனைகள் டிஜிட்டல் வாயிலாக நடைபெறுவதால், அது தொடர்பான மோசடிகளும் அதிகரித்துள்ளன. அப்படித்தான் சமீபத்தில் வெளியான அறிக்கை ஒன்று ஆன்லைனில் ஷாப்பிங் செய்பவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

வெளியான அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில், ஆன்லைன் ஷாப்பிங் செய்பவர்கள் ரூ. 25,000 கோடி முதல் ரூ.28,000 கோடி வரை மறைமுக கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் என்ற பேரில் இழப்பதாகத் தெரியவந்துள்ளது. டேட்டம் இன்டெலிஜென்ஸ் என்ற சந்தை பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளும் நிறுவனம், ஜூன் 9–ஆம் தேதி அன்று "டார்க் பேட்டர்ன்ஸ் இன் இந்தியாஸ் ஆன்லைன் மார்க்கெட் பிளேசஸ்" என்ற அறிக்கையை வெளியிட்டது.

அறிக்கையில் கிட்டத்தட்ட 304 மில்லியன் ஆன்லைன் ஷாப்பிங் வாடிக்கையாளர்கள் இருப்பதாகவும், அதில் 88 சதவீதம் பேர் இந்த டார்க் பேட்டர்ன் என்னும் கூடுதல் கட்டணத்திற்கு இரையாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சராசரியாக ஒவ்வொரு வாடிக்கையாளரும் மாதா மாதம் 78 ரூபாய் முதல் 87 ரூபாய் வரை கூடுதலாக செலவு செய்து ஷாப்பிங் செய்கின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது.

இதில் 63 சதவீதம் பேர் ஷாப்பிங் தளங்களில் ஒரு பொருளை வாங்குவதற்கான அனைத்து விவரங்களையும் கொடுத்துவிட்டு, இறுதியாக பை என்று கிளிக் செய்வதற்கு முன்னர் கூடுதல் கட்டணங்களை செலுத்துவதாகவும் அறிக்கை தெரிவித்துள்ளது. இதில் வேதனை பட வேண்டிய விஷயம் என்னவென்றால் 2024–ஆம் ஆண்டில் இந்திய வாடிக்கையாளர்கள் சுமார் 52 சதவீதம் பேர் இந்தக் கூடுதல் கட்டணத்திற்கு பாதிக்கப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் தற்போது இந்த விகிதம் 63 சதவீதமாக அதிகரித்துள்ளது.

டேட்டம் இன்டெலிஜென்ஸ் நிறுவனம் சுமார் 12 முன்னணி ஆன்லைன் ஷாப்பிங் தளங்களை ஆய்வு செய்தது. மேலும் 2026–ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 50 நகரங்களில் உள்ள 2590 வாடிக்கையாளர்களிடம் கணக்கெடுப்பையும் நடத்தியது. அதில் அமேசான் நிறுவனம் மிகவும் நம்பிக்கையான தளமாக மக்கள் மத்தியில் கருதப்பட்டது.

ஆனால் ஃபிளிப்கார்ட் அதற்கு நேர் மாறாக மக்கள் மத்தியில் அவநம்பிக்கை பெற்ற தளமாகக் கருதப்பட்டது. அதேபோல பயண டிக்கெட் முன்பதிவு செய்யப்படும் ஆன்லைன் தளமான மேக்மைட்ரிப் மிகவும் பாதுகாப்பான தளமாக கருதப்பட்டது. அதே நேரம் அதிக கட்டணம் கிளியர்ட்ரிப் மக்கள் மத்தியில் நம்பிக்கை பெறவில்லை.

கணக்கெடுப்பு நடத்தப்பட்டவர்களில் சுமார் 81% வாடிக்கையாளர்கள் ஏற்கனவே தாங்கள் கூடுதல் கட்டணங்களுக்கு ஆட்படுவது தெரிந்தே ஷாப்பிங் செய்வதாக ஒப்புக்கொண்டனர். நியாயமான விலை மற்றும் வெளிப்படை தன்மையான சர்வீஸ் இருந்தால் அதிக விலை கொடுக்கவும் தயார் என 74 சதவீத மக்கள் தெரிவித்தனர்.

# மாநிலங்களவை தேர்தல்: 18 பேர் போட்டியின்றி வெற்றி பெற்றதாக அறிவிப்பு!



புதுடெல்லி, ஜூன். 12–

காலியாக உள்ள 26 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தல் அண்மையில் அறிவிக்கப்பட்டது. இதற்கு வேட்பு மனு தாக்கல் செய்திருந்த 26 பேரில் 18 பேர் போட்டியின்றி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இதில் 18 பாஜக வேட்பாளர்கள், 4 காங்கிரஸ் வேட்பாளர்கள், 3 தெலுங்கு தேசம் வேட்பாளர்கள், 1 ஜனசேனா வேட்பாளர் அடங்குவர்.

காங்கிரசில் போட்டியின்றி வெற்றி பெற்றவர்களில் அதன் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் தேசிய செய்தி தொடர்பாளர் பவன் கேரா உள்ளிட்டோர் அடங்குவர். அவர்கள் இருவரும் கர்நாடகாவில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல குஜராத்தில் காலியாக இருந்த 4 இடங்களில் மூன்றை பாஜக கைப்பற்றியுள்ளது. முன்னதாக இந்த மூன்றில் ஒன்று காங்கிரஸ் வசம் இருந்த நிலையில் பாஜக இம்முறை மூன்றையும் கைப்பற்றியுள்ளது.

**ம.பி. சர்ச்சை**

மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட மீனாட்சி நடராஜனின் வேட்புமனு, தெலுங்கானாவில் உள்ள பழைய வழக்கை சுட்டிக்காட்டி தேர்தல் ஆணையம் நிராகரித்தது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில் அங்கு மொத்தம் காலியாக இருந்த 3 மாநிலங்களவை இடங்களில் பாஜக வேட்பாளர்கள் போட்டியின்றி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது மேலும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக தனது வேட்புமனு நிராகரிப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் அவர் மனுதாக்கல் செய்த நிலையில் அந்த மனு இன்று விசாரிக்கப்படுகிறது.

ஆனால் தேர்தல் நடைமுறை விசாரணை முடியும் வரை நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது. இந்நிலையில் மபியில் பாஜக 3 இடங்களை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

**தேர்தல்**

தற்போது 18 பேர் போட்டியின்றி வெற்றி பெற்றுள்ள நிலையில் மீதமுள்ள 8 இடங்களுக்கு மட்டும் வரும் ஜூன் 18 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. ஜார்கண்டில் 2, மணிப்பூர், மேகாலயா, அசாம், மிசோரம், அருணாச்சல பிரதேசம், மிசோரம், மகராஷ்டிரா, தமிழ்நாடு ஆகியவற்றில் 1 இடம் ஆகியவற்றுக்கு ஜூன் 18 வாக்கெடுப்பு நடைபெறுகிறது.

தற்போதைய நிலவரப்படி மாநிலங்களவையில் மொத்தம் உள்ள 245–இல் பாஜகவின் என்டிஏ கூட்டணிக்கு 147 எம்பிக்கள் உள்ளனர். எதிர்கட்சிக்கு 67 இடங்களும் பிற பிராந்திய காட்சிகளுக்கு 28 எம்பிகளும் உள்ளனர்.

# ஜூலை முதல் IRCTC இணையதளத்துக்கு குட்பை..!!




புதுடெல்லி, ஜூன். 12–

இந்தியாவில் ரயில் பயணிகளிடம் மிகவும் பிரபலமானது ஐஆர்சிடிசி இணையதளம். ஐஆர்சிடிசி இணையதளம் பெரிய அளவில் மாற்றப்பட இருக்கிறது என மத்திய ரயில்வே துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

இதன் படி அடுத்த மாதத்தில் இருந்து புதிதாக ஐஆர்சிடிசி இணையதளம் அறிமுகம் செய்யப்பட இருப்பதாக தெரிவித்திருக்கிறார். ஜெய்ப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், ஜூலை 15 முதல் புதிய ஐஆர்சிடிசி இணையதளம் பயன்பாட்டுக்கு வரும் என கூறினார். பயணிகளின் அனுபவத்தை மேம்படுத்தக்கூடிய வகையிலும் நவீன தொழில்நுட்பங்கள் கொண்டதாகவும் இந்த புதிய ஐஆர்சிடிசி இணையதளம் இருக்கும் என ரயில்வே துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். வேகமானதாகவும் எளிமையாக மக்கள் டிக்கெட் முன்பதிவு செய்யும் வகையிலும், புதிய ஐஆர்சிடிசி இணையதளத்தில் வசதிகள் கொண்டு வரப்பட்டிருப்பதாக கூறுகின்றனர்.

ஏற்கனவே ரயில்வே துறை அமைச்சகம் 40 ஆண்டுகால பயணிகள் முன்பதிவு அமைப்பான Passenger Reservation System எனப்படும் PRS அமைப்பில் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டு வருவதாக அறிவிப்பு வெளியிட்டிருந்தது. நவீன தொழில்நுட்பங்களின் வளர்ச்சி, ஏஐ வருகை ஆகிய காரணங்களால் Passenger Reservation System முழுவதுமாக மாற்றம் செய்யப்பட உள்ளது. இந்த மாற்றங்கள் ஆகஸ்ட் முதல் படிப்படியாக அமலுக்கு வர உள்ளது. இந்த நவீன முன்பதிவு அமைப்பின் மிகப்பெரிய சிறப்பம்சமே AI தொழில்நுட்ப பயன்பாடு தான். இதன் மூலம் உங்களது வெயிட்டிங் லிஸ்ட் (Waiting List) டிக்கெட் கன்பார்ம் ஆகுமா ஆகாதா என்பதை மிகத் துல்லியமாகக் கணிக்க முடியும். முன்னதாக இதன் துல்லியம் 53% ஆக மட்டுமே இருந்தது, ஆனால் தற்போது இந்த புதிய தொழில்நுட்பம் மூலம் 94% துல்லியமாக டிக்கெட் உறுதியாகும் வாய்ப்புகளை பயணிகள் தெரிந்துகொள்ளலாம். அதாவது டிக்கெட் பதிவு செய்துவிட்டு கன்ஃபார்ம் ஆகுமா இல்லையா என நொடிக்கு நொடி செக் செய்ய தேவையில்லை. தற்போதுள்ள பிஆர்எஸ் அமைப்பில் ஒரு நிமிடத்திற்கு 32 ஆயிரம் டிக்கெட்டுகள் மட்டுமே முன்பதிவு செய்ய முடியும் அது ஒரு நிமிடத்திற்கு 1.5 லட்சம் டிக்கெட்டுகள் என மாற்றி அமைக்கப்பட இருக்கிறது. மேம்படுத்தப்பட்ட பி ஆர் எஸ் அமைப்பில் ஒரு நிமிடத்திற்கு 40 லட்சம் பேர் ரயில் டிக்கெட் தொடர்பான என்கொயரி மேற்கொள்ள முடியும். அது மட்டும் பல மொழிகளில் செயல்படும் வகையில் இது இருக்கும்.

# பள்ளிகள் இனி லஞ்சம் வழங்க தேவையில்லை! அமைச்சர் ராஜ்மோகன்!!

கோவை, ஜூன். 12–

''தனியார் பள்ளிகள் உரிமம் மற்றும் புதுப்பித்தலுக்காக, இனி எந்தவித லஞ்சமும் வழங்க தேவையில்லை,'' என, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.



கோவை வ.உ.சி. மைதானத்தில், 39வது அரசு பொருட்காட்சியை அமைச்சர் ராஜ்மோகன் திறந்து வைத்தார். பின், அவர் நிருபர்களிடம் கூறியதாவது: சிங்கப்பெண் திட்ட அறிமுக நிகழ்ச்சியில் ஏ.ஐ., தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட வீடியோவில் பிழை ஏற்பட்டது. அரசு நிகழ்ச்சிகளில் ஒளிபரப்பப்படும் வீடியோக்கள், இனி தமிழ் வளர்ச்சித் துறையின் ஒப்புதலுக்குப் பிறகே வெளியிடப்படும்.

பள்ளி மாணவர்கள் மற்றும் தமிழ் அறிஞர்களுக்கு இலவச பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதால், அரசு போக்குவரத்து கழக ஓட்டுநர்கள் அவர்களிடம் கனிவாக நடந்து கொள்ள வேண்டும். தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கப்படாமல் உள்ள மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகள் விரைவில் வழங்கப்படும்.

தனியார் பள்ளிகளின் உரிமம் மற்றும் புதுப்பித்தலுக்கான நடைமுறைகள் ஒற்றைச்சாளர முறையில் எளிமையாக்கப்பட்டுள்ளன. அதனால் இடைத் தரகர்கள் வழியாக அங்கீகாரம் புதுப்பித்தல் போன்ற முறைகேடுகள் நடக்க வாய்ப்பில்லை. பள்ளிகள் எந்தவித லஞ்சமும் வழங்க தேவையில்லை.

அதற்கு பதிலாக, பள்ளிகள் தங்களது கட்டண விவரங்களை வெளிப்படையாக அறிவித்து, நியாயமான கட்டணத்தை மட்டுமே வசூலிக்க வேண்டும். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார், கலெக்டர் பவன்குமார், மாநகராட்சி கமிஷனர் ரவி தேஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**45 நாள் பொருட்காட்சி**

அரசு பொருட்காட்சி, 45 நாட்கள் நடக்கிறது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பள்ளிக்கல்வித் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட 26 அரசு துறை, 6 அரசு சார்ந்த நிறுவனங்கள் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர்களுக்கு ரூ.10 மற்றும் பெரியவர்களுக்கு ரூ.15 நுழைவுக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்களுக்கு ரூ.5 மட்டும் வசூலிக்கப்படும்.



சென்னை விமான நிலையத்தில் பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், சமூக நீதித் துறை அமைச்சர் வன்னி அரசு ஆகியோர், உலகின் மிகச் சிறந்த இசைக்குழுவான லண்டன் சிம்பொனி ஆர்கெஸ்ட்ரா (London Symphony Orchestra) குழுவின் 92 இசைக் கலைஞர்களை கொண்டு, இளம் வயதில் 'ORIGINAL SYMPHONY MUSIC' உருவாக்கியுள்ள லிடியன் நாதஸ்வரமை தமிழ்நாடு அரசின் சார்பில் வரவேற்றனர். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



# நவகிரகங்களை கட்டுப்படுத்தும் ரகசியம்..!




கிரக பெயர்ச்சிகளில் சனி, குரு, ராகு கேது பெயர்ச்சிகள் நடக்கும்போது நாம் நம்முடைய ராசிக்கு எப்படிப்பட்ட பலன்கள் கிடைக்கும் என பார்ப்பது உண்டு. கிரகங்களின் அமைப்பு நம்முடைய குடும்ப வாழ்க்கை, தொழில், ஆரோக்கியம், உறவுகள் என நம்முடைய வாழ்க்கையை பல விதத்தில் ஆட்டிப்படைக்க கூடியதாக இருக்கின்றன. ஆனால் அதை தாண்டி, மேலே குறிப்பிட்ட கிரகங்கள் மட்டும் இல்லாமல் நவகிரகங்களையும் நம்முடைய பழக்கவழக்கத்தின் மூலம், செயல்பாடுகள் மூலமாக கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியும். இந்த பதிவில் எந்த மிகப்பெரிய வழிபாடு சடங்குகளை கடைப்பிடிப்பதை தாண்டி, நம் ஜாதகத்தின் படி நாம் எப்படிப்பட்ட பழக்கத்தை கடைபிடித்தால் நவகிரக அமைப்பை வலுப்படுத்தலாம் என எளிய வழிமுறைகளை கீழே தெரிந்துகொள்ளுங்கள்.

**சூரியன் கிரகம்**

தினமும் அதிகாலையில் எழுந்து நாம் சூரியனை வழிபாடு செய்வதும், காயத்ரி மந்திரத்தை உச்சரித்து சூரியனுக்கு நீர் (அர்க்கியம்) விடுவது நல்லது. மேலும் தினமும் சூரிய நமஸ்காரம் யோகாவை செய்வது உங்களுடைய உடல் வலிமையை, ஆற்றலையும் அதிகரிக்கும். சோம்பேறித்தனத்தைவிடுத்துஎதிலும்தன்னம்பிக்கையுடன் செயல்படுவதன் மூலம் சூரிய கிரகத்தின் வலுவை நீங்கள் பெறுகிறீர்கள்.



**சந்திரன் கிரகம்**

ஜோதிடத்தில் சந்திரன் மனோகாரகன் என அழைக்கப்படுகிறார். இவர் ஒருவருடைய மன ஆரோக்கியத்தை தரக்கூடியவர். ஜாதகத்தில் சந்திரனை வலுப்படுத்த உங்களுடைய பெற்றோரை மதித்து அன்பு செலுத்தவும். மனதை அமைதியாக வைத்துக் கொள்ளும் தியானம், யோகா போன்றவற்றை செய்யவும். கோபத்தை கட்டுப்படுத்துங்கள். சரியான விதத்தில் சரியான அளவு ஆழ்ந்த உறக்கத்தை எடுத்துக் கொள்வது சந்திரனின் ஆற்றலை அதிகரிக்கும்.




**செவ்வாய் கிரகம்**

அங்காரகன் என அழைக்கப்படும் செவ்வாய் கிரகங்களின் தளபதி என குறிப்பிடப்படுகிறது. வேறு ஒருவருக்கு ஆற்றல், வீரம், வேகத்தை தரக்கூடியவர். செவ்வாய் கிரகத்தை வலுப்படுத்த தினமும் உடற்பயிற்சி செய்வது அவசியம். ஒழுக்க த்தை கடைபிடிக்கவும். பணிகளை உரிய நேரத்தில் திட்டமிட்டு முடிக்க முயற்சிக்கவும். உங்களுடைய கடினமான உழைப்பு மற்றும் ஒழுக்கம் செவ்வாயின் அமைப்பை வளப்படுத்தும்.




**புதன் கிரகம்**

உங்களுடைய ஜாதகத்தில் புதன் கிரகத்தை வலுப்படுத்த, தினமும் ஏதேனும் ஒரு சிறிய அள விலாவது புதிய விஷயங்களை கற்றுக்கொள்ள முயலவும். புத்தகங்களை வாசியுங்கள். நீங்கள் பேசும்போது உங்களுடைய பேச்சில் நிதான த்தையும் சிந்தனை யுடனும் அணுகுவது அவசியம். திறமையை வளர்த்துக் கொள்வதும், இனிமையான பேச்சின் அணுகுமுறை மூலமும் இந்தக் கிரகத்தை வலுப்படுத்தலாம்.



**வியாழன்**

நவகிரகங்களில் முழு சுபர், அதாவது எப்பொழுதும் நன்மைகளை தரக்கூடியவர் என அழைக்கப்படும் வியாழன் கிரகம் ஒவ்வொருவ ருக்கும் மிகவும் முக்கியமானது. ஜாதகத்தில் குருவை வலுப்படுத்த ஆசிரியர்கள், பெற்றோர்களை மதித்து நடக்கவும். எப்பொழுதும் சரியான பாதையில் செல்ல முயற்சி செய்வது, நேர்மறையான சிந்தனையுடன் செயல்படுவது, கவனமான செயல் அணுகுமுறை ஆகிவை இந்த கிரகத்தை வலுப்படுத்தும்.



தினமும் குருவினுடைய காயத்ரி மந்திரத்தை உச்சரிக்கவும்.ஓம் விருஷபத் வஜாய வித்மஹேக்ருணி ஹஸ்தாய தீமஹிதந்நோ குருஹ் ப்ரசோதயாத்

**சுக்கிரன்**

ஜாதகத்தில் சுக்கிரனை வலுப்படுத்த நினைப்பவர்கள் தூய்மைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மேலும் உங்க ளுடைய உறவு களை மதித்து நடக்கவும். கலையை ரசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். மற்றவர்களிடம் கனிவாக நடந்து கொள்வதோடு, ஆடம்பரத்தை தவிர்த்து உங்க ளின் புறத்தோ ற்றத்தை சற்று மேம்படுத்த முயலவும். குறிப்பாக சேமிக்க முயலவும்.




**சனி கிரகம்**

ஜோதிடத்தில் கர்மகாரகன் என அழைக்கப்ப டக்கூடிய சனியை வலுப்படுத்த நேரத்தை மதி யுங்கள். வேலையை கண்ட அஞ்சாமல் கடினமாக உழைக்க தவறாதீர்கள். தேவைப்படுவோருக்கு உதவுங்கள். எதிலும் நேர்மையாகவும், ஒழுக்கத்துடன் இருப்பதன் மூலம் உங்களுடைய ஜாத கத்தில் சனியின் ஆற்றலை வலுப்படுத்தலாம்.




**ராகு கிரகம்**

சர்ப்ப கிரக ங்க ளில் ஒன்றான ராகு உங்களுடைய ஜாதகத்தில் வலுப்படுத்த பொய் சொல்வதை தவிர்ப்பது மற்றும் தீய நட்பில் இருந்து விலகி இருப்பது அவசியம். உங்களுடைய இலக்கு களை அடைய நினைப்பவர்கள் அதிலிருந்து கவனம் சிதறாமல் பார்த்துக் கொள்ளவும். தேவையற்ற கற்பனை மற்றும் மா யம், மயக்கங்களை தவிர்க்கவும்.



**கேது பகவான்**

ஒரு ஜாதகத்தில் கேதுவையும் வலுப்படுத்த அலங்கா ரத்தை தவிர்க்க வும். மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்த செய ல்படவும். பேச்சில் இனிமையை கடைபிடிக்கவும். குறிப்பாக உங்களுடைய வாழ்க்கை முறையை எளிமையாக வைத்துக் கொள்ளவும்.






தென்மண்டல ரயில்வே வார விழாவில் மதுரை கோட்டம் ஐந்து சுழற் கேடயங்களை கைப்பற்றியது தெற்கு ரயில்வே மண்டலத்தில் சென்னை, திருச்சி, சேலம், மதுரை, திருவனந்தபுரம், பாலக்காடு ஆகிய கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் மதுரை கோட்டம் கடந்த நிதியாண்டில் சிறப்பாக செயல்பட்ட மதுரை ரயில்வே மேல்நிலைப்பள்ளி, சிறப்பாக பராமரிக்கப்பட்ட மதுரை ஓடும் தொழிலாளர் ஓய்வறை, பயணிகளின் குறைகளை "ரயில் மகாத்" செயலி மூலம் விரைவாக தீர்த்து வைத்தது ஆகியவற்றிற்கு மூன்று சுழற் கேடயங்கள் பரிசாக கிடைத்தது. மேலும் சிறப்பாக செயல்பட்ட மதுரை கோட்ட ரயில் போக்குவரத்து துறை மற்றும் இயந்திரவியல் துறை ஆகியவற்றிற்கு முறையே சென்னை, சேலம் கோட்டம் மற்றும் திருச்சி கோட்டத்துடன் இணைந்து இரண்டு சார்பு சுழற் கேடயங்களும் வழங்கப்பட்டது. இந்த சுழற் கேடயங்கள் வியாழக்கிழமை அன்று சென்னையில் நடைபெற்ற 71– வது ரயில்வே வார விழாவில் தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர். என். சிங் வழங்கினார். இந்த சுழற் கேடயங்களை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுடன் இணைந்து மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் ஓம் பிரகாஷ் மீனா பெற்றுக்கொண்டார்.

**நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்**



# குடல் புற்றுநோய்: யாருக்கு அதிக ஆபத்து..?




உலகம் முழுவதும் புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருகிறது. புற்றுநோய் உடலின் பல்வேறு பகுதிகளைத் தாக்கக்கூடும். அவற்றில், பெருங்குடல் அல்லது (பெருங்குடல் மற்றும் மலக்குடல்) புற்றுநோய் வேகமாக அதிகரித்து வருகிறது. இப்பற்றுநோய் பெருங்குடலின் செல்களில் உருவாகிறது. இது பொதுவாக புற்றுநோய்க்கு முந்தைய நிலையிலான 'பாலிப்ஸ்' (polyp) எனப்படும் திசு வளர்ச்சியிலிருந்து மெதுவாக உருவாகிறது. ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டால் இதற்கு எளிதாகச் சிகிச்சை அளிக்க முடியும், எனவே வழக்கமான பரிசோதனை அவசியம்.

நமது உடலில், செரிமானப் பாதையில் சிறுகுடலுக்கு அடுத்ததாகப் பெருங்குடல் அமைந்துள்ளது. சிறுகுடலில் உணவு செரிக்கப்படுகிறது; அதைத் தொடர்ந்து பெருங்குடல் வருகிறது. இங்கு உணவிலிருந்து சத்துக்கள் உறிஞ்சப்பட்டு, கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. இந்தப் பெருங்குடல் பகுதி 'கோலன்' (colon) என்று அழைக்கப்படுகிறது, இதன் அடுத்த பகுதி 'ரெக்டம்' (rectum) அல்லது மலக்குடல் என்று அழைக்கப்படுகிறது. தற்காலத்தில் இளைஞர்களிடையே பெருங்குடல் புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருகிறது. அதாவது, செரிமானப் பாதையின் கீழ் பகுதிகளான பெருங்குடல் மற்றும் மலக்குடலில் ஏற்படும் புற்றுநோயே பெருங்குடல் புற்றுநோய் என்று அழைக்கப்படுகிறது.

முன்பெல்லாம் இந்நோய் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே ஏற்படும் நிலை இருந்தது. ஆனால் தற்போது 20–25 வயதுடைய இளைஞர்களிடமும் இது காணப்படுகிறது. இந்நோய் உடலில் மெதுவாகத் தொடங்கி, பின்னர் திடீரென தீவிரமடைகிறது. இத்தகைய சூழலில், இளைஞர்களுக்கு ஏன் பெருங்குடல் புற்றுநோய் ஏற்படுகிறது என்ற கேள்வி எழுகிறது என்று நிபுணர் விகாஸ் குமார் அகர்வால் கூறுகிறார்.

காலப்போக்கில் உலகம் முழுவதும் பெருங்குடல் புற்றுநோய் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. இந்நோய் எந்த வயதிலும் ஏற்படலாம். ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை இதற்கான பல காரணங்களில் ஒன்றாகும். பல நேரங்களில் நோயின் ஆரம்ப நிலையில் எந்த அறிகுறியும் தெரிவதில்லை. அதனால்தான் பலருக்குத் தங்களுக்குப் பெருங்குடல் புற்றுநோய் இருப்பதே தெரிவதில்லை. இதன் விளைவாக, சிகிச்சை தாமதமாகும் போது பிரச்சனைகளும் சிக்கல்களும் அதிகரிக்கின்றன என்று நிபுணர் ரியான் டெய்லர் கூறுகிறார்.

மலங்கழிக்கும்போது ஏற்படும் ரத்தப்போக்கு, தொடர்ந்து நீடிக்கும் வயிற்றுப்போக்கு அல்லது மலச்சிக்கல், வயிற்று வலி, திடீர் உடல் எடை குறைவு மற்றும் ரத்த சோகையால் ஏற்படும் சோர்வு போன்ற அறிகுறிகளைப் புறக்கணிக்காதீர்கள்.

யாருக்குப் பெருங்குடல் புற்றுநோய் வரலாம்?

சிலருக்கு இந்நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகம். வயது முதிர்வு இந்நோய்க்கான ஒரு முக்கிய காரணியாகும். வயது கூடக்கூட இந்தப் புற்றுநோய் வருவதற்கான அபாயமும் அதிகரிக்கிறது. 50–55 வயதுடையவர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

இருப்பினும், இளைஞர்களுக்கும் பெருங்குடல் புற்றுநோய் ஏற்படுகிறது. நிபுணர்களின் கூற்றுப்படி, பல்வேறு காரணங்களால் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் இந்நோய் வருவதற்கான அபாயம் அதிகரிக்கலாம். இதற்கு முக்கியக் காரணம் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையாகும். குடும்பத்தில் பெருங்குடல் புற்றுநோய் இருந்ததற்கான வரலாறு அல்லது போக்கு இருந்தால், ஆபத்து அதிகமாக இருக்கும். எனவே, குடும்பத்தில் பெருங்குடல் புற்றுநோய் அல்லது வேறு ஏதேனும் புற்றுநோய் இருந்ததற்கான வரலாறு உள்ளதா என்பதைக் கண்டறியுங்கள்.

அதிக அளவில் பதப்படுத்தப்பட்ட இறைச்சி அல்லது பிற பதப்படுத்தப்பட்ட உணவுகளை உண்பவர்கள் மற்றும் குறைந்த நார்ச்சத்து கொண்ட உணவை உட்கொள்பவர்களுக்கும் பெருங்குடல் புற்றுநோய் வரலாம். மது அருந்துதல் மற்றும் புகைப்பிடித்தல் போன்ற ஆபத்தான பழக்கங்களைக் கொண்டவர்களுக்கும் பெருங்குடல் புற்றுநோய் வரலாம். உடற்பயிற்சி செய்யாமல், அதிக நேரம் உட்கார்ந்தே வேலை செய்பவர்களுக்கும் இந்த நோய் வருவதற்கான அதிக ஆபத்து உள்ளது. பெருங்குடல் அழற்சி மற்றும் புண்கள் போன்ற பிரச்சனைகள் உள்ளவர்களுக்கும் பெருங்குடல் புற்றுநோய் வருவதற்கான அதிக ஆபத்து உள்ளது.

பெருங்குடல் புற்றுநோய்க்கு எதிரான சிறந்த தடுப்பு நடவடிக்கை பரிசோதனையாகும், ஏனெனில் பாலிப்கள் புற்றுநோயாக மாறுவதற்கு முன்பே அவற்றைக் கண்டறிந்து அகற்ற இது மருத்துவர்களுக்கு உதவுகிறது. பொதுவான பரிசோதனை மற்றும் கண்டறியும் முறைகளில் பெருங்குடல் அகநோக்கி, மலப் பரிசோதனைகள், படமெடுத்தல் மற்றும் ரத்தப் பரிசோதனைகள் ஆகியவை அடங்கும்.



கிளை நூலகத்தை பயன்படுத்திய,மாணவ மாணவிகளுக்கு பரிசு தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், இலட்சுமிபுரம் கிளை நூலகத்தில் 2–வது மாதாந்திர ஆலோசனை கூட்டம் வாசகர் வட்ட தலைவர் ராமச்சந்திரன் தலைமையில், உ.ப தலைவர் தனசேகரன், செயலாளர் சந்திரசேகரன், பொருளாளர் டாக்டர்.சாந்தி சீனிவாசன் முன்னிலையில் நடைபெற்றது.

# நடுத்தர மக்களுக்கு பேரிடி... ஆவின் 'கிரீன் மேஜிக்' பால் விநியோகம் நிறுத்தம்; தமிழக அரசு முடிவு?

சென்னை, ஜூன். 12–

ஆவின் நிறுவனம் பச்சை நிற கிரீன் மேஜிக், வெல்வட் நிற டிலைட், நீல நிறம் மற்றும் ஆரஞ்ச் நிறத்தில் பால் பாக்கெட்டுகளை விற்று வருகிறது. இதில், பச்சை நிற கிரீன் மேஜிக் பால் பாக்கெட் விநியோகத்தை ஆவின் நிறுவனம் முழுமையாக நிறுத்த உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சென்னையில் பச்சை நிற பால் பாக்கெட் விநியோகம் 60 முதல் 70 சதவீதம் வரை திடீரெனக் குறைத்துள்ளது. 2023 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக இதன் விற்பனை நிறுத்தப்பட்டு வரும் நிலையில் வரும் நாட்களில் முழுமையாக நிறுத்தப்படலாம் என்று கூறப்படுகிறது.




**கடும் நிதி இழப்பு**

கோடை காலத்தில் பால் கொள்முதல் குறைவு மற்றும் 'கிரீன் மேஜிக்' பால் விற்பனையில் ஏற்படும் கடும் நிதி இழப்பு ஆகியவை இந்த முடிவுக்கான முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றன. சென்னையில் தினசரி 14 லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்படும் நிலையில், 4.5% கொழுப்புச் சத்து கொண்ட கிரீன் மேஜிக் பால் மட்டும் சுமார் 7.5 லட்சம் லிட்டர் அளவுக்கு விற்பனையாகும். ஆனால் கடந்த சில நாட்களாக இந்த விநியோகம் 2.5 லட்சம் லிட்டராக சரிந்துள்ளதாக கூறப்படுகிறது.

நஷ்டத்தில் ஆவின் நிறுவனம்

ஆவின், கிரீன் மேஜிக் பாலை லிட்டருக்கு 44 ரூபாய்க்கு விற்பனை செய்கிறது. ஆனால் உற்பத்திச் செலவு சாதாரண காலங்களில் 48 – 49 ரூபாயாகவும், கோடை காலத்தில் 49 – 51 ரூபாயாகவும் உயர்கிறது. இதனால் ஒவ்வொரு லிட்டர் பாலுக்கும் 4 முதல் 5 ரூபாய் வரை நஷ்டம் ஏற்படுகிறது. அதே நேரத்தில் தனியார் நிறுவனங்கள் இதே தரத்திலான பாலை 64 முதல் 68 ரூபாய் வரை விற்கின்றன. மேலும், தனியார் நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது ஆவின் கொள்முதல் செய்யும் பாலில் கொழுப்புச் சத்து குறைவாக உள்ளது. இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் விதிமுறைகளின்படி, கொழுப்புச் சத்தை சமன் செய்ய வெளிச்சந்தையில் இருந்து வெண்ணெய் வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதற்காக மட்டும் மாதம் 65 முதல் 75 கோடி ரூபாய் வரை கூடுதல் செலவு செய்ய வேண்டியுள்ளது என ஆவின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கலந்தரா ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் செயல்பட்டு வரும் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பு அறையினை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில், 2 –வது நாளாக நடைபெற்ற 1435 ஆம் பசலி (2025 – 2026) ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயத்தில் (ஜமாபந்தி), வருவாய்த் தீர்வாய அலுவலர் / மாவட்ட ஆட்சியர் திரு.கு.ரவிகுமார் கலந்துக்கொண்டு, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை நேரடியாக பெற்றுக்கொண்டார். உடன் வட்டாட்சியர் சுதாகர், வட்டாட்சியர் (ச.பா.தி) பாரதி, பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.


# ஓய்வு பெற்றவர்களை அரசு மருத்துவமனை நிர்வாகிகளாக நியமிக்கக் கூடாது!

சென்னை, ஜூன். 12–

அரசு மருத்துவமனைகளின் உயர் பொறுப்புக்கு ஓய்வு பெற்றவர்களை பணி நீட்டிப்பு அடிப்படையில் மீண்டும் நியமிக்கக் கூடாது என அரசு மருத்துவர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக ஜனநாயக தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத்தின் தலைவர் பால கிருஷ்ணன் கூறியதாவது:

கடந்த திமுக மற்றும் அதிமுக ஆட்சிகளில் ஓய்வு பெற்ற மருத்துவர்களுக்கும், தங்களுக்கு சாதகமானவர்களுக்கும் உயர் பொறுப்புகளுக்கு பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. இதனால், பணிமூப்புமருத்துவர்களுக்கு முறையான பதவி உயர்வு கிடைக்காத நிலை ஏற்பட்டது. குறிப்பாக, கிண்டி உயர் சிறப்பு மருத்துவமனையில் ஓய்வு பெற்ற மருத்துவர் பார்த்தசாரதிக்கு இயக்குநர் பதவி வழங்கப்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும், இரண்டாவது முறையும் பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது மூன்றாவது முறை யும் பணி நீட்டிப்பு பெறுவத ற்கான முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.



திமுக ஆட்சியில் செய்த தவறை, தவெக அரசும் மேற்கொண்டு தகுதியானவர்களுக்கான பதவி உயர்வை தடுக்கக் கூடாது என்று அவர் தெரிவித்தார்.

# அரசு மருத்துவமனைகளில் செல்போன் செயலி மூலம் ஓ.பி. சீட்டு!

சென்னை, ஜூன். 12–

தமிழகத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகள் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாகவும், நோயாளிகள் வரிசையில் நீண்ட நேரம் காத்திருப்பதை தவிர்க்க ஆன்லைனில் ஓ.பி. சீட்டு வழங்குவது தொடர்பாக ஒரு செல்போன் செயலி (ஆப்) உருவாக்கப்பட உள்ளதாகவும் தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் அருண்ராஜ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்திலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகள்



காத்திருக்கும் நேரம் அதிகமாக உள்ளது. திங்கள்கிழமை, செவ்வாய்கிழமை போன்ற நாட்களில் சென்னையில் உள்ள ஸ்டேன்லி, சென்னைமருத்துவக்கல்லூரி மருத்துவமனை போன்ற அரசு மருத்துவமனைகளுக்கு கிட்டத்தட்ட 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் பேர் வரை வெளிநோயாளிகள் வருகின்றனர். அவர்கள் ஓ.பி. சீட்டு வாங்குவதற்கே 1 மணி நேரம், 2 மணி நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. அதுவும் வெயிலில் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே தனியார் மருத்துவமனை போல அரசு மருத்துவமனைகளில் முன்னரே ஆன்லைனில் ஒரு செல்போன் செயலி மூலம் ஒரு அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிவிட்டு 8 முதல் 8.30 மணிக்குள் அல்லது 9 மணி முதல் 9.30 மணிக்குள் என ஒரு நேரத்தை முடிவு செய்து, செல்போன் செயலி மூலம் ஆதாரை பயன்படுத்தி அப்பாயிண்ட்மெண்ட்டை உறுதி செய்துவிட்டு மருத்துவக்கல்லூரிக்கு வருவதற்கான ஒரு திட்டம் குறித்து விவாதித்துள்ளோம். கூடிய விரைவில் அதை தொடங்க திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# த.மா.கா பொதுச்செயலாளர் யுவராஜா த.வெ.க.வில்..?

சென்னை, ஜூன். 12–


யுவராஜா தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி தமிழக வெற்றி கழகத்தில் தனது ஆதரவாளர்களுடன் இன்னும் ஓரிரு நாளில் இணை உள்ளதாக தகவல் வேகமாக பரவி வருகிறது . ஆனால் இது குறித்து உறுதிப்படுத்த முடியவில்லை. இன்னும் ஓரிரு நாளில் இந்த தகவல் உண்மைதானா அல்லது வழக்கம் போல் வதந்தியா என தெரிந்துவிடும். இதனால் ஈரோடு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



# சரிந்த வேகத்தில் உயர்ந்த தங்கம்!

சென்னை, ஜூன். 12–


சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,400 அதிகரித்து ரூ.1,10,400–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.300 அதிகரித்து ரூ.13,800–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை 2 நாட்களாக உயராமல் இருந்த நிலையில் உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 அதிகரித்து



ஒரு கிராம் வெள்ளி ரூ.265–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# வேலை வாய்ப்பு

## மத்திய அரசு நிறுவனத்தில் 67 பணியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: C–DAC மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையம் (Centre for Development of Advanced Computing)

அறிவிப்பு எண்: C–DAC/CH/05/2026/8010

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்

மொத்த காலிப்பணியிடங்கள்: 67 (Project Associate, Project Engineer / PS&O Executive, Project Manager / Program Manager / Program Delivery Manager / Knowl–edge Partner, Project Technician, Senior Project Engineer / Module Lead / Project Leader ஆகிய பதவிகள்)

பணிபுரியும் இடம்: சென்னை, டெல்லி, ஹைதராபாத், மும்பை, இந்தியாவின் எந்தப் பகுதியிலும், கொச்சி, கோவா, லட்சத்தீவு, போர்ட் பிளேர், விசாகப்பட்டினம், போபால், கார்வார், பெங்களூரு, திருவனந்தபுரம், பாட்னா, சில்சார், குஜராத்

தொடக்கத் தேதி: 01.06.2026

கடைசித் தேதி: 20.06.2026 அன்று இரவு 11.59 மணி வரை

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் (Online)

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.cdac.in/

# லட்சிய ஜனநாயக கட்சியில் மாற்று கட்சியினர் இணையும் விழா!



திருப்பூர், ஜூன் 12–

லட்சிய ஜனநாயக கட்சி சார்பில் திருப்பூர் வெள்ளையங்காடு பகுதியில் உள்ள தனியார் திருமண மஹாலில் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மாற்று கட்சியினர் இணைப்பு விழா நடைபெற்றது விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் பின்பு அவரது தலைமையில் தென்னாடு மக்கள் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் செந்தில் வாண்டையார் இந்து மக்கள் கட்சி மாநில செயலாளர் வேலு முருகன். மற்றும் சின்னக்கரை பள்ளிவாசல் அப்பாஸ். தென்னாடு மக்கள் கட்சி மாநில பொருளாளர் காளிமுத்து உள்ளிட்ட 200–க்கும் மேற்பட்டோர் லட்சிய ஜனநாயக கட்சியில் தங்களை இணைத்துக் கொண்டனர் இணைந்தவர்களுக்கு விரைவில் பொறுப்பு வழங்குவதாக பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா அவர்கள் தெரிவித்தார் முன்னதாக வெள்ளையங்காடு நாள் ரோடு சந்திப்பில் கட்சியின் கொடி கம்பத்தில் கொடியேற்றப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.....

# வாணியம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் மூன்றாம் நாள் ஜமாபந்தி நிறைவிழா; மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு!



வாணியம்பாடி, ஜூன். 11–

வாணியம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று மாலை 4 மணி அளவில் நடைபெற்ற ஜமாபந்தி நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சியர் ரவிகுமார் வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் பாரூக் கலந்துகொண்டு ஜமாபந்தி விழாவில் வழங்கப்பட்ட மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு 51 பயனாளிகளுக்கு ரூ8,33,610 மதிப்பீட்டில் நல கட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் வருவாய் கோட்டாட்சியர் தணிகாசலம் வட்டாட்சியர் சுதாகர் வருவாய் ஆய்வாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# விஜய்யா? அண்ணாமலையா? ராகவா லாரன்ஸின் அடுத்த முடிவு!




திருச்சி கிழக்கு தொகுதியில் நடிகர் ராகவா லாரன்ஸ் போட்டியிடுவதாக தகவல் வெளியான நிலையில், தனது அரசியல் நுழைவு தொடர்பான அறிவிப்பை விரைவில் வெளியிடுவதாக அவர் கூறியிருந்தார்..

இந்த நிலையில் அரசியலுக்கு வருவதாக ராகவா லாரன்ஸ் அறிவித்துள்ளார்.. இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர் " எதிர்பா ர்ப்புகள் ஏதுமின்றி உங்கள் கடமையை நேர்மையுடன் செய்யுங்கள். உங்கள் ஆலோசனையும் வழிகாட்டுதலும் எனக்குத் தேவை. நான் அரசியலில் ஈடுபடுவேன் என்று ஒருபோதும் நினைத்ததில்லை. பணம் சம்பாதிப்பதிலோ அல்லது பதவியை அடைவதிலோ எனக்கு எந்த நோக்கமும் இருந்ததில்லை.

நான் பெரிதும் மதிக்கும் மற்றும் எனக்கு நெருக்கமான ஒருவர் அரசியலுக்கு வந்தால், அவருடன் இணைந்து நின்று, தனிப்பட்ட முறையில் நான் செய்து வந்ததை விட பெரிய அளவில் சமூகத்திற்குப் பணியாற்ற வேண்டும் என்பது மட்டுமே என் எண்ணமாக இருந்தது. தற்போதைய என்னை அரசியலில் ஈடுபட வேண்டிய ஒரு கட்டத்திற்குக் கொண்டு வந்துள்ளன. நான் பகிர உள்ள வீடியோ வில், அரசியல் குறித்த எனது புரிதல், அது என் வாழ்வில் எப்படி வந்தது, அரசியல் குறித்த என் தாயாரின் பார்வை மற்றும் என் பயணத்தை வடிவமைத்த சில முக்கியமான மற்றும் சுவாரஸ்யமான நிகழ்வுகள் குறித்து, என் மனதிலிருந்து முழுமையான நேர்மையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பேசியுள்ளேன்.

இந்த வீடியோவை இறுதிவரை பார்த்து, உங்கள் கருத்துக்களை என்னுடன் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அனைவரின் ஆசியுடன் நான் இந்த முக்கியமான அடியை எடுத்து வைக்கும்போது, உங்கள் ஆலோசனையும் வழிகாட்டுதலும் எனக்கு மிகவும் முக்கியமானதாக அமையும்.'' என்று குறிப்பிட்டுள்ளார்..

ஒரு நடிகர் அரசியலிலும் உச்சத்தை எட்ட முடியும் என்பதை முதன்முதலில் நிரூபித்து காட்டியவர் எம்.ஜி.ஆர்.. அதன்பின்னர் பல்வேறு நடிகர்கள் அரசியலுக்கு வந்தாலும் பெரியளவில் வெற்றி பெற முடியவில்லை..

நடிகர் விஜயகாந்த் அரசியலில் நுழைந்த போது அவருக்கு வரவேற்பு இருந்தாலும் அவரால் எதிர்க்கட்சி தலைவர் என்ற பதவி வரை மட்டுமே அடைய முடிந்தது..

ஆனால் சமகால அரசி யலில், ஒரு நடிகர் அரசியலில் உச்சத்தை தொடலாம் என்பதை மீண்டும் நிரூபித்து ள்ளார் விஜய்.. எம்.ஜி.ஆர். சாதிக்காத பல விஷயங்களை கூட முதல் தேர்தலலியே விஜய் சாதித்துள்ளார்.. விஜய்யின் இந்த அரசியல் வெற்றி ராகவா லாரன்ஸிற்கும்உத்வேகம்அளித்திருக்கலாம்..

இதனிடையே அண்ணாமலை பாஜகவில் இருந்து விலகி We the Leader என்ற இயக்கத்தின் வாயிலாக மக்களை ஒன்றிணைத்து முறையான கட்டமைப்புடன் கட்சியாக மாற முடிவு செய்துள்ளார்.. எனவே ராகவா லாரன்ஸ் விஜய், அண்ணாமலை என இருவரில் ஒருவருடன் இணைந்து செயல்படுவார் என்று கூறப்பட்டது.. அதன்படி அண்ணாமலை தொடங்கிய புதிய கட்சியில் ராகவா லாரன்ஸ் இணைய முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.. இந்த சூழலில் ராகவா லாரன்ஸ் அரசியலுக்கு வருவதாக வெளியிட்டுள்ள அறிவிப்பு முக்கியத்துவம் பெறுகிறது..



சென்னை எழிலகம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூட்ட அரங்கில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், செயற்கை நுண்ணறிவு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் ரா. குமார், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் த.லோகேஷ் தமிழ்செல்வன் ஆகியோர் முன்னிலையில் இணைய வழி பட்டா மாறுதல் உட்பிரிவு அற்ற இனங்கள் தானியங்கி பட்டா மாறுதல் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் நா. முருகானந்தம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் யாதவ், வணிகவரி, பத்திரப்பதிவுத் , பத்திரப்பதிவுத் துறை மற்றும் அறநிலைங்கள் துறைச் செயலாளர்ஜெ. குமரகுருபரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் K.S. பழனிசாமி, நில நிர்வாக ஆணையர் R. கஜலட்சுமி, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் T. கிறிஸ்துராஜ் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

# குழந்தை தொழிலாளர் உறுதிமொழி ஏற்பு!

மதுரை, ஜூன். 12–

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், மதுரை (லிமிடெட்), திண்டுக்கல் மண்டல அலுவலகத்தில் மண்டல பொதுமேலாளர் திரு. ஆ.முத்துகிருஷ்ணன் தலைமையில், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு உறுதிமொழியை அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றனர். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், மதுரை (லிமிடெட்), திண்டு க்கல் மண்டல அலுவலகத்தில் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்வு நடைபெற்து.



இந்நிகழ்வில் திண்டுக்கல் மண்டல பொதுமேலாளர் திரு.ஆ.முத்துகிருஷ்ணன் அவர்களின் தலைமையில், இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி கல்வி பெறுவது குழந்தைகளின் அடிப்படை உரிமை என்பதால் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை ஒரு போதும் எந்தவித பணிகளிலும் ஈடுபடுத்த மாட்டேன் எனவும், அவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பேன் எனவும், குழந்தை தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவேன் என்றும், தமிழ்நாட்டை குழந்தை தொழிலாளர் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு என்னால் இயன்றவரை பாடுபடுவேன் எனவும் உளமாற உறுதி கூறுகிறேன் என்று குழந்தைத் தொழி லாளர் ஒழிப்பு உறுதிமொழியை அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றனர்.

மேலும், திண்டுக்கல் மண்டலத்திற்குட்பட்ட 16 பணிமனைகளிலும், அந்தந்த கிளை மேலாளர்கள் முன்னி லையில் போக்குவரத்து தொழிலாளர்கள் உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

# சினிமா துளிகள்..!

## "ஜெய்லர் 2 அப்டேட் முதல் ஸ்பைடர்மேன் ரிலீஸ் வரை... சினிமா உலகில் பரபரப்பு!"




### கோலிவுட்

சூப்பர் ஸ்டார் Rajinikanth நடித்துவரும் Jailer 2 படத்தில் Hrithik Roshan முக்கிய கதாபாத்திரத்தில் இணையவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. நடிகர் Suriya நடிக்கும் Suriya 47 படத்தில் அவர் போலீஸ் அதிகாரியாக நடிக்கலாம் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

### பாலிவுட்

Dhamaal 4 படத்தின் டிரெய்லர் வெளியீட்டுக்காக 60 அடி உயர போஸ்டர் மற்றும் பிரம்மாண்ட விழா ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

Akshay Kumar தனது புதிய படமான Welcome to the Jungle குறித்து பேசியுள்ளார். படம் குறித்த எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.

Ram Charan இனி "இந்திய படம்" என்ற பார்வையுடன் பல மொழி இயக்குநர்களுடன் பணியாற்ற விருப்பம் தெரிவித்தார்.

### ஹாலிவுட்

Spider–Man: Brand New Day இந்தியாவில் உலக வெளியீட்டிற்கு முன்பாகவே வெளியாக உள்ளது. ரசிகர்கள் மத்தியில் பெரும் உற்சாகம் நிலவுகிறது.

Taylor Swift, Toy Story 5 பிரீமியரில் திடீர் இசை நிகழ்ச்சி நடத்தி ரசிகர்களை ஆச்சரியப்படுத்தினார். Katy Perry, FIFA World Cup 2026 தொடக்க விழாவில் இதுவரை நேரடியாக பாடாத ஒரு பாடலை முதல் முறையாக பாட உள்ளதாக தெரிவித்துள்ளார்.



மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுவதற்கான உறுதிமொழி மாண்புமிகு மேயர் (பொ) / துணை மேயர் தி.நாகராஜன் அவர்கள், ஆணையாளர் கௌரவ் குமார், ஆகியோர் தலைமையி அனைத்து பணியாளர்களும் ஏற்றுக் கொண்டனர் அருகில் துணை ஆணையாளர் இராஜாராம், உதவி நகர்நல அலுவலர் அபிஷேக், மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# பா.ஜ.க. கூட்டணியில் இருந்து ஜி.கே.வாசன் வெளியேற முடிவு?

சென்னை, ஜூன். 12–

தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்துள்ள கட்சிகளில் ஒன்று த.மா.கா. இந்த கட்சியின் தலைவரான ஜி.கே.வாசன் டெல்லி பா.ஜ.க. தலைவர்களுடன் நெருங்கிய நட்பு வைத்திருப்பவர்.



பிரதமர் மோடியுடன் தமிழகத்தில் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது இருவருக்கும் இடையிலான நட்பு மேடைகளிலேயே வெளிப்பட்டதை பார்க்க முடிந்தது.

### அதிருப்தி

கடந்த சட்டமன்ற தேர்தலின் போது கேட்ட தொகுதிகள் ஒதுக்காதது மற்றும் தொகுதி எண்ணிக்கையில் இழுத்தடித்தது ஆகியவை ஜி.கே. வாசனுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது.

தேர்தலில் விஜய் அலையில் சிக்கி முன்னணி கட்சிகளே தடுமாறி போனது. எல்லா கட்சிகளிலும் சேதாரம் ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் த.மா.கா.வும் வெளியேறும் நிர்வாகிகளை தக்க வைக்க முடியாமல் தடுமாறுகிறது. ஏற்கனவே வடசென்னை மாவட்ட தலைவர் பிஜூ சாக்கோ, காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் மலையூர் புருசோத்தமன் உள்ளிட்டோர் விலகி விட்டனர்.

கட்சியின் இளைஞர் அணி மாநில தலைவர் யுவராஜாவும் விலகி த.வெ.க.வில் சேர இருப்பதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவித்தனர். மேலும் சில மாவட்ட தலைவர்களும் விலக முடிவு செய்து இருப்பதாக கூறப்படுகிறது.

### புறக்கணிப்பு

இதற்கிடையில் டல்லியில் நடந்த தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தாலும் ஜி.கே.வாசன் பங்கேற்காமல் புறக்கணித்து விட்டார்.

கூட்டணி அதிருப்தியால் தான் அவர் கலந்து கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. அ.தி.மு.க–பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலக வாசன் முடிவு செய்து இருப்பதை த.மா.கா. நிர்வாகிகள் உறுதிப்படுத்தினார்கள்.

### ஆலோசனை

த.மா.கா. செயற்குழு கூட்டம் (14–ந்தேதி) சென்னையில் நடக்கிறது. இந்த கூட்டத்தில் அடுத்த கட்டமாக கட்சி எடுக்க வேண்டிய நிலைப்பாடுகள் பற்றி ஆலோசனை கேட்கிறார்.

இது தொடர்பாக கட்சியின் மூத்த நிர்வாகிகள் சிலரிடம் கேட்டபோது, தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலையில் தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ், பா.ஜ.க. ஆகிய கட்சிகளுடன் கூட்டணி வைத்த அனுபவம் ஏற்கனவே புரிந்துவிட்டது. புதிதாக விஜய் மிகப்பெரிய பலத்துடன் அரசியலுக்கு வந்துள்ளார். அவருக்கு சவால்விடும் வகையில் புதிதாக அண்ணாமலையும் கட்சி தொடங்கி இருக்கிறார். கட்சியின் நீண்ட கால அரசியல் நிலைத்தன்மைக்கு ஏற்ற வகையில் உடனடியாக முடிவெடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இது பற்றி எங்கள் கருத்துக்களை செயற்குழுவில் தெரிவிப்போம் என்றனர்.







Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020